சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 3/2019

2024 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 3 ம் நாள் RW2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திரு. சி. முரளி த /பெ. | நாள் 03.10.2024 |
| வயது. | தொழில் |
| கிராமம். | வட்டம். |

**2 ம் எதிர்மனுதாரர் சா.2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்**

1. நான் தற்பொழுது திருக்கழுக்குன்றம் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணி புரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் கண்டுள்ள டிஎன் 19 ஏஒய் 4565 மற்றும் டிஎன் 19 ஏ இசட் 2462 ஆகிய வாகனங்களின் குற்ற வழக்கு 684/2018 வழக்கில் எங்கள் அலுவலகத்தால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையினை தாக்கல் செய்கிறேன். அவை **சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2.** டிஎன் 19 ஏஒய் 4565 என்ற வாகனத்திற்கு ஆய்வின்போது அதன் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் எங்கள் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே ஓட்டுநர் உரிமம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

2. நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சா.சா.ஆ.1 ல் கண்டுள்ளவாறு ஓட்டுநருக்கு உரிமம் உள்ளது என்றாலும், அவர் அதனை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னாலும் உரிமம் உள்ளதா என்று எனக்கு தெரியாது, ஆனால் தாக்கல் செய்யவில்லை. விபத்திற்கு பிரசாந்த் என்பவர் காரணமில்லை என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

மறுவிசாரணை – இல்லை.